மாவட்ட மக்கள் தங்களு இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அனுமதியின்றி பேனர் வைத்தால் நடவடிக்கை

## கலெக்டர் அலுவலகம் அறிக்கை

புதுச்சேரி, பிப். 6: புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுச்சேரி பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதியில் அனுமதியின்றி பேனர் மற்றும் கட் அவுட் வைப்பதற்கு கடந்த 21.1.2020 அன்று மாவட்ட ஆட்சியரால் 144 தடை உத்தரவு போடப்பட்டது. இதை தொடர்ந்து புதுவையில் உள்ள சாலையோரங்களில் அனுமதியின்றி ஆங்காங்கு வைக்கப்பட்டுள்ள பேனர் மற்றும் விளம்பர பதாகைகளை அகற்றும் பணியில் பொதுப்பணித் துறை, உள்ளாட்சி துறை ஊழியர் ஈடுபட்டு வருகின்றனர். பல இடங்களில் இதுபோன்ற பதாகைகள் அகற்றப்பட்டுள்ளன. இருந்தபோதும் இத்தகைய விளம்பர பதாகைகள் தொடர்ந்து வைக்கப்பட்டு வருகின்றன. இதனை கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம் பொதுமக்கள் அத்தகைய செயல்களில் ஈடுபட வேண்டாம் என கேட்டுக்கொள்கிறது. இதையும் மீறி அனுமதியின்றி பேனர் மற்றும் கட்அவுட்கள் வைப்பவர்கள் மீது காவல் துறையில் புகார் அளித்து குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.